மலேசியத் தமிழ் ஆய்விதழ்
Malaysian Journal of Tamil
eISSN: 2990-9694

# சீனி நைனா முகம்மது கவிதைகளில் நன்னெறிப் பண்புகள்

## Moral values in Seeni Naina Muhammad's Poems

மலர்விழி ஜெகநாதன் / Malarvili Jaganathan[1]
கோமதி செல்வராஜ் / Komathy Selvaraj[2]
[1]Teacher, SK Taming Jaya
[2]Teacher, SJK(T) Ladang Holyrood
Corresponding Email: jmalarvili88@gmail.com

**ஆய்வுச்சாரம்**

இவ்வாய்வானது தேன்கூடு கவிதைத் தொகுப்பு நூலில் வெளிப்படும் நன்னெறிப் பண்புகளை அடையாளம் காணும் நோக்கங்களைக் கொண்டுள்ளது. கவிஞர் சீனி நைனா முகமது மலேசியாவில் புகழ்பெற்ற, மரியாதைக்குரிய கவிஞர். பாரம்பரிய கவிதைகளின் உலகில், அவர் தனக்கென ஒரு பெயரை நிறுவினார், மேலும், அவர் வாழ்ந்த சமூகத்தை அவதானித்த ஓர் இலக்கியப் புராணக்கதை. 1958 முதல் 2011 வரை அவர் எழுதிய 200க்கும் மேற்பட்ட செவ்வியல் கவிதைகளை உள்ளடக்கிய தேன்கூடு கவிதைத் தொகுப்பு 2011ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. கவிதைத் தொகுப்பில் உள்ள பல கவிதைகளில் ஒழுக்க விழுமியங்கள் காணப்பட்டது. மேலே குறிப்பிட்டுள்ள ஏதேனும் ஒர் அம்சத்தில், முந்தைய காலக்கட்டத்தில் தோன்றிய மற்றொரு இலக்கியத்தைப் போன்ற முக்கிய கருத்து, கொள்கை, இலக்கணம், அமைப்புப் போன்றவற்றைக் கொண்ட ஓர் இலக்கியம். ஒப்பீட்டு இலக்கிய ஆய்வுகள், முந்தைய இலக்கியங்களுடன் எந்த ஒற்றுமையும் இல்லாத மற்றும் முற்றிலும் புதிதாக உருவாக்கப்பட்ட இலக்கியங்களைக் கொண்ட இலக்கியங்கள் குறிப்பிட்ட மொழிகளின் இலக்கியக் கொள்கைகளால் புறக்கணிக்கப்பட்டுள்ளன. தேன்கூடு கவிதைத் தொகுப்பு நூலில் உள்ள கவிதைகள் பண்புசார் ஆய்வு, நூலக ஆய்வு அடிப்படையில் ஆய்வு செய்யப்பட்டுள்ளன. இந்த ஆய்வு குழந்தைகள், இளைஞர்கள், குடும்ப உறுப்பினர்கள், சமூகத்தினர் ஆகியோரின் சிந்தனைகளை வடிவமைக்க செய்கின்றன. மேலும், இம்மாதிரியான நன்னெறிப் பண்புகள் வாழ்க்கையினைச் செம்மைபடுத்துவனவாகவும் அமைந்துள்ளன.

**கருச்சொற்கள்:** தேன்கூடு, மரபு கவிதை, நன்னெறிப் பண்புகள்

**Abstract**

This study aims to identify the ethical characteristics that emerge in the collection of poetry Thenkudu. The poet Seeni Naina Mohammed is a renowned and respectable poet in Malaysia. In the world of classical poems, he established a name for himself and he is a literary legend who observed the society in which he lived. The anthology of poetry Thenkudu was published in the year 2011, which comprises more than 200 classical poems that have been written by him from 1958 to 2011. Moral values are seen in many poems in the collection. A literature which has key concept, principle, grammar, structure, etc. akin to another literature that appeared at an earlier time period, in any one of the above-mentioned aspects. The comparative literature studies have found that, the literature which doesn't have any semblance with the previous literature and having entirely newly created literature has been ignored by the literary principles of that particular language. A qualitative method based on library and text analysis is carried out in this research. The analyzed of moral values can serve as an example and guidance to children, teenagers, family members and the community in general. The implication of these research findings would help to change the mindset of youths regarding moral values and consequently be absorbed into their daily routine.

**Keywords:** Thenkudu, Poems, Moral Values

**முன்னுரை**

மொழி, மக்களின் மனத்தைப் பிரதிபலிக்கும் கண்ணாடி என்பர். ஒரு மொழி செம்மாந்த இடத்தைப் பெறுவதும் செழிப்புற்று விளங்குவதும் அம்மொழியைப் பேசும் மக்களை ஒட்டியே அமைந்துள்ளது. அவ்வகையில் உலகில் பல எண்ணிறந்த மொழிகள் தோன்றியதாக அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர். ஆனால், இன்று காலப்போக்கில் பல மொழிகள் அழிவின் விளிம்பில் இருக்கின்றன. சிலவே, இன்றளவும் நிலைத்து வாழும் போற்றினைப் பெற்றுள்ளன. அம்மொழிகளுள் தமிழ், சீனம் போன்ற ஒரு சில மொழிகளே பேச்சு வழக்கிலும், இலக்கிய வழக்கிலும் தொடர்ந்து பயன்படுத்தப்பட்டு வருகின்றன. மொழியும் மொழி வழியான இலக்கியமும் மாந்தனின் செம்மாந்த வாழ்வு நெறிகளுக்கு வழிக்காட்டியாக அமைந்து வருகின்றது.

சிறந்த எண்ணங்களைச் சிறந்த மொழியில் கூறுவது அல்லது எழுதுவதுதான் இலக்கியம். சிறந்த இலக்கியம் என்பது இலக்கை நோக்கி நம்மைக் கொண்டு செல்லும் ஆற்றல் கொண்டது. மனித வாழ்வில் நடக்கும் ஒவ்வொரு நிகழ்வுகளும் அனுபவத்தை முன்னிறுத்தியே நடைபெறும். ஒவ்வொரு காலச்சூழ்நிலையிலும் மனிதன் இன்பத்தையும் துன்பத்தையும் சேர்ந்தே அனுபவிக்கின்றான். தன்னுடைய வாழ்நாளில் இன்பத்தை மட்டும் நுகரும் மனிதன் சில நேரங்களில் தீயவைக்கும் அடிமையாகிறான். அப்பொழுது அவனைத் திருத்த வேண்டியுள்ளது. அதற்காக எழுதப்பட்டதுதான் அறநூல்கள். அறநூல்கள் அறத்தை வலியுறுத்தி மனிதனை நல்வழிப்பாதையில் கொண்டு செல்ல உதவுகின்றன. மனிதச் சமுதாயம் நல்லன்புடன் வாழ வேண்டுமாயின் அங்குச் சான்றோர்களும் அறநூல்களும் தேவைப்படுகின்றன.

அவ்வகையில், புலம்பெயர்ந்த தமிழரான இறையருட்கவிஞர் செ. சீனி நைனா முகம்மது அவர்கள் பல்வேறு வகையில் தமிழ் இலக்கியத்தை மலேசிய மண்ணில் வாழவும் வளரவும் வழிவகுத்துள்ளார். இவர் மரபுவழி வந்த இலக்கிய இலக்கண அறிவுடையவர். மலேசியத் திருநாட்டின் மதிப்புறு கவிஞர். மரபு கவிதை உலகில் தனக்கென ஓரிடத்தை நிலை நிறுத்திக்கொண்ட இவர், தான்வாழும் சமூகத்தை உற்று நோக்கிய ஒரு படைப்பாளியாவார். 1958 முதல் 2011ஆம் ஆண்டு வரை இவர் எழுதிய 200க்கும் மேற்பட்ட மரபு கவிதைகள் உள்ளடக்கிய 'தேன்கூடு' எனும் கவிதைத் தொகுப்பு 2011ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டது. இக்கவிதைத் தொகுப்பில் இடம்பெற்றுள்ள பல கவிதைகளில் நன்னெறிப் பண்புகள் காணப்படுகின்றது.

**ஆய்வுத் தரவுகள் பகுப்பாய்வு**

இவ்வாய்வுக்கான தரவுகள் 'தேன்கூடு' எனும் கவிதைத் தொகுப்பில் இடம்பெற்றுள்ள சில கவிதைகளில் நன்னெறிப் பண்புகளைக் குறித்துப் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது.

**விடாமுயற்சி**

இறையருட் கவிஞர் ஐயா சீனி நைனா முகம்மது அவர்கள் இந்த நாட்டில் நம்மோடு தொல்காப்பியராகவும் தொல்காப்பியமாகவும் வாழ்ந்த மாபெரும் தமிழறிஞர். பெரும்பாலும் கவிஞர் கட்டுரைகள், சிறுகதைகள், வானொலி நாடகங்கள், கவிதைகளை எழுதியுள்ளார். எதுவும் முடியும் என்ற கவிதையின் தலைப்பிலேயே நம்மால் கவிதையின் கருப்பொருளைக் கணிக்க இயலும். அவ்வகையில், இக்கவிதையின் கருப்பொருளானது விடாமுயற்சி என்பதே ஆகும். இக்கவிதையில் நாம் எதையும் சாதிக்க முடியும் என்ற எண்ணம் கொண்டு அதற்கு நாம் முனைப்போடு செயல்பட வேண்டும் என்பது வலியுறுத்தப்படுகிறது. இக்கவிதையில் கிடைக்கப்பெறும் நன்னெறிப் பண்பானது யாதெனில் நாம் நம் வாழ்க்கையில் துவண்டுவிடக்கூடாது என்பது;

துவளும் மணந்தானே எதிரி – அதைத்
தூக்கி எறிவாயடா!
துணியும் வரைதானே துயரம் – நீ
துள்ளி எழுவாயடா!
என்ற வரியில் புலப்படுகிறது. இதற்குச் சான்றாக, தெய்வப்புலவர்
அருமை உடைத்தென்று அசாவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும். (குறள் 611)

எனும் திருக்குறளில் நம்மால் முடியுமா என்று மனத்தளர்ச்சி அடையாமல், முடியும் என்ற நம்பிக்கையுடன் முயற்சி செய்தால் அதுவே பெரிய வலிமையாக அமையும் என்று மொழிந்துள்ளார். அடுத்ததாக, வாழ்க்கையில் கடினமான உழைப்பு மிக அவசியம் எனும் நன்னெறிப்பண்பு வெளிப்படுகிறது. எடுத்துக்காட்டாக;

உடலை வளைக்காத எவனும் – இங்கு
உலவும் பிணந்தானடா!
உழைக்கத் தயங்காத கையில் – இந்த
உலகம் சிறுபந்தடா!

எனும் வரிகளில் நாம் ஒரு காரியத்தை எண்ணுவது பெரிதல்ல. அதைச் செயல்படுத்தி அதற்கேற்ப உழைக்க வேண்டும். உழைப்பிற்குப் பலன் நிச்சயம் கிடைக்கும். எந்தவொரு செயலும் உழைப்பினால்தான் நிறைவு பெறுகிறது.

சங்க இலக்கியப்பாடல்களில் மனித மனங்களின் பண்புநலன்களாலும் உணர்வுகளாலும் இணைத்துப் பின்னப்பட்ட இலக்கியமாகும். சங்க இலக்கியத்தை ஆய்வு செய்த அறிஞர்களின் கூற்றுகளின் வழியாக உளத்தியல் இலக்கியம் என்று கூறலாம். இவ்விலக்கியத்தை அணுகுமுறை வகைகளில் உளத்தியல் அணுகுமுறையும் (Psychological Approach) ஒருவகையைச் சார்ந்தது. சங்கப் பாடல்கள் அனைத்தும் மனித மனங்களின் ஒட்டுமொத்தமான உணர்வுகளின் வெளிப்பாடுகளையும் முதன்மையாகக் கொண்டவை. ஆதலால் இக்கருத்துகளின் வழியாகக் குறுந்தொகைப் பாடல்களில் கபிலரின் உளத்தியல் அணுகுமுறையை இங்கு ஆராயலாம். ஐந்திணைப் பாடல்களில் குறிஞ்சித்திணைப் பாடல்களைப் பாடுவதில் புலமைப்பெற்றவர் கபிலர்.

இவர் குறுந்தொகையில் இருபத்தெட்டுப் பாடல்களைப் பாடியுள்ளார். தலைவன் கூற்றாக ஐந்து பாடல்களையும், தலைவி கூற்றாகப் பதினைந்து பாடல்களையும், தோழி கூற்றாக ஐந்து பாடல்களையும் பாடியுள்ளார். இவர் பாடியுள்ள பாடல்கள் அனைத்தும் குறிஞ்சி நிலமக்களின் காதல் ஒழுகலாறுகளை எடுத்துரைப்பதாக உள்ளன. இப்பாடல்களில் உளத்தியல் அணுகுமுறையில் அமைந்துள்ள பாங்கினை இங்கு விளக்க முயலுகிறது .

**கடமையுணர்வு**

இன்றைய காலத்தில் பிள்ளைகள் பெற்றோரின் அன்பின்பால் கொண்டுள்ள ஏக்கத்தையும் பெற்றோரின் பொறுப்பின்மையையும் அடிப்படையாகக் கொண்டு 'யாரேனும் சொல்லுங்களேன்' என்ற கவிதை இயற்றப்பட்டது. அதாவது அக்குழைந்தையின் ஏக்கங்களையும் எதிப்பார்ப்பையும் யாரேனும் அதன் பெற்றோரிடம் கூறுங்களேன் என்ற கருத்தை வெளிப்படுத்தும் விதமாகக் கவிதைக்கு இப்பெயர் சூட்டப்பட்டுள்ளது. இக்கவிதையில் கவிஞர் இக்காலப் பெற்றோரின் நிலையை அழகாக எடுத்துரைக்கிறார். இக்கவிதையில் சுட்டிக்காட்டப்படும் நன்னெறிப் பண்பானது நாம் ஒவ்வொருவரும் நமது கடமையைச் செவ்வனே செய்ய வேண்டும். கடமை என்று கூறும் பொழுது நமது நினைவில் வருவது நம் பணியின்பால் கொண்ட கடமையாகும். ஆனால், ஒவ்வொரு உறவுகளின்பாலும் நமக்குப் பல கடமைகள் இருக்கின்றன.

இதில் முக்கிய கடமையாகக் கருதப்படுவது நாம் பெற்றோரின் மேல் கொண்டுள்ள கடமை மற்றும் பிள்ளைகளின் மேல் கொண்டுள்ளக் கடமையாகும் (மெர்வின், 1996). இவ்விரு கடமைகளையும் ஒரு மனிதன் செய்யவில்லை என்றால் அவன் எந்த அறம் செய்தும் பயனில்லை. இக்கவிதை வரியில் பெற்றோர்கள் தங்கள் கடமையைச் சரிவரச் செய்யாதது எடுத்துரைக்கப்பட்டிருக்கிறது. எடுத்துக்காட்டாக;

காலைமுதல் இரவுவரை காணாமல் நானமுழும்
கண்ணீரை மிஞ்சியதா கார்வீடு காசு பணம்

என்ற வரிகளில் பெற்றோரின் அன்புக்காக ஏங்கி தவிர்க்கும் குழந்தையின் கண்ணீரைவிட கார், வீடு, பணம் பெரிதா என்று குழந்தை வினவுகிறது. இஃது இன்றைய சூழலை அழகாகப் படம் பிடித்துக் காட்டுகிறது. குழந்தையின் வளர்ச்சிக்குப் பெற்றோரின் அன்பு மிக அவசியமாகும். அவ்வகையான அன்பைப் பெற்றோர்கள் தங்களின் குழந்தைகளுக்கு முழுமனதுடன் வழங்க வேண்டும். இதை எடுத்துரைக்கும் வகையில்;

அந்த வானுக்கு இரண்டு தீபங்கள் அது
சூரியன் சந்திரனே
என் வாழ்வுக்கு இரண்டு தீபங்கள்
என் தாயோடு தந்தையரே

என்ற வைரமுத்துவின் பாடல் குழந்தைக்குப் பெற்றோரின் அன்பு எவ்வளவு முக்கியம் என்பதை எடுத்துரைக்கிறது. இக்கவிதையில் தென்படும் மற்றுமொரு கருத்தானது பொதுநலமாகச் சிந்திக்காமல் இருப்பது. பெற்றோர்கள் இருவரும் பணிப்புரிவதற்குப் பல

காரணங்கள் இருந்தாலும் அவர்களின் பிள்ளைகளைப் பற்றிச் சிந்திக்க வேண்டும். ஏனெனில், ஒரு குழந்தை வளரும் பொழுது அதற்குப் பெற்றோரின் அன்பு மிக முக்கியமாகும். குறிப்பாக அன்னையின் அன்பு (நடேசன், 2018).

**பொறுப்புணர்வு**

'உனக்கேது ஓய்வு' எனும் கவிதையைச் சற்று ஆராய்ந்து பார்க்கையில் பொறுப்புணர்வு, மொழிப்பற்று, நேர்மை ஆகிய நன்னெறிப் பண்புகளை மெய்யுணர முடிகிறது.

நீ ஓய்ந்திருக்க நானெங்கே கண்டேன்!
காய்கதிரின் வெயிலினையும் கடுமழையின் பெயலினையும்
கருதாமல் பணிபுரிவாய் எங்கும்

எனும் கவிதை வரிகளின் வாயிலாக ஓய்வின்றி நேரம் காலம் கருதாமல் தனது கடமையை ஆற்ற வேண்டுமென்று கூறப்படுகிறது. 'கடமையைச் செய்; பலனை எதிர்பாராதே' என்று பகவத்கீதைச் சொல்லப்பட்டுள்ளது. (சுகி சிவம், 2013) இக்கவிதையிலோ, ஆசிரியர் இராமலிங்கம் எந்தவொரு பலனை எதிர்பாராமல் நேரம் காலம் பாராமல் தனது கடமையைச் செய்ததைக் கவிஞர் அவர்கள் தெளிவுறுத்தியுள்ளார். ஏனெனில், கடமை உணர்ச்சியே நமது நேர்மையான வாழ்வின் சூத்திரமாக விளங்குகிறது. எனவே, காலம் கடந்து வருந்தாமல் இப்போதே நமது கடமைகளைச் செயல்படுத்துவது நனிச்சிறப்பாகும் என்பது அடியேனின் பணிவான கருத்தாகும்.

**நேர்மை**

அடுத்ததாக, நேர்மை என்ற நன்னெறிப் பண்பானது,

கடமையிலே ஏமாற்றிக் காசுறைக்குக் கைநீட்டும்
கள்ளர்களைக் காணுகின்ற வேளை – நீ
கண்களினால் வீசிடுவாய் வாளை!

எனும் கவிதை வரிகளின் மூலம் நாம் நமது கடமையைச் செய்கையில் எந்தவொரு ஊழலுமின்றி நேர்மையாகச் செயலாற்ற வேண்டுமென்று மெய்ப்பிக்கின்றது. ஏனெனில், நேர்மை ஒரு சிறந்த கொள்கை. அதை எத்தகைய சூழ்நிலையிலும் விட்டுவிடாமல் இருப்பது மாபெரும் வெற்றியைத் தரும். (ஜெயந்தி, 2008) இதனை மெய்ப்பிக்கும் வகையில் வாழ்வின் ஒவ்வொரு தருணத்திலும் செய்ய வேண்டிய கடமை இருக்கிறது; அதனை நேர்மையுடன் செய்து முடிப்பது வெற்றிக்கு விருந்தாக அமையும் என்பதில் எந்தவொரு ஐயமில்லை.

**தாய்மொழிப்பற்று**

ஐயா சீனி நைனா முகமது அவர்கள் இயற்றிய 'தேன்கூடு' எனும் கவிதைத் தொகுப்பில் இடம்பெற்ற 'நிலைபெற நீ வாழியவே!' கவிதையானது 'தமிழ்த்தாய் வாழ்த்து' எனும்

கருப்பொருளை மையமாய் வைத்து எழுதப்பட்டது. இக்கவிதையில் தென்படும் நன்னெறிப்பண்புகளில் முதன்மை வகிக்கின்றது 'தாய்மொழிப்பற்று'. ஒரு மனிதன் தனது தாய்மொழியின் மீது பற்றுக் கொண்டிருக்க வேண்டுமெனில் முதலில் அவன் அம்மொழியின் தனித்துவத்தையும் சிறப்பு அம்சங்களையும் உள்ளுனர்ந்திருக்க வேண்டும். இக்கவிதையில் வரும்,

'தனிப்பெருமை கொண்டவளே'

என்று தமிழைப் பாடிப் புகழும் வரி தமிழின் சிறப்பை நன்கு உணர்த்துகிறது. இத்தொடர் தமிழ் மற்ற மொழிகளுக்கு இல்லாத பல தனிச் சிறப்புகளையும் அவற்றின் விளைவாக உலகில் தனிப்பெருமையையும் கொண்டிருப்பதைக் குறிக்கிறது. மொழியறிஞர் தேவநேயப் பாவானார் உலகில் பல மொழிகள் இருந்தாலும் அவற்றுள் தொன்மை, முன்மை, இளமை, வலிமை, செம்மை, பெருமை, திருமை எனப் பல்வகைச் சிறப்புகளைத் தமிழ் ஒருங்கே உடையது என்று ஆணித்தரமாகச் சொல்கிறார். ஆகவே, ஒவ்வொரு தமிழரும் தனது தாய்மொழியின் சிறப்பை நன்குணர்ந்து மொழியாளுமைப்பெற்று விளங்க வேண்டும் என்பதைக் கவிஞர் உணர்த்துகிறார்.

மடமையினைக் கொன்றொத்தும் உரிமைகளை
வென்றெடுத்தும்
மலைசியத்தில் இனமுயர்தல் வேண்டும் – என்று
மனங்கிடந்து துடித்திருப்பாய் யாண்டும்!

எனும் கவிதை வரிகளின் வாயிலாக மொழிப்பற்று எனும் நன்னெறிப் பண்பின் வழியாக நமது இனத்தை உயர்ந்த நிலையை அடைய செய்வதற்கு நமது மனம் ஏக்கம் கொள்ள வேண்டுமென்று உணர முடிகிறது. அவ்வகையில், மொழிப்பற்று இல்லாதவர்களிடம் தேசப்பற்று இருக்காது என்று தந்தை பெரியார் நமது மனத்தில் பதியமிட்டுள்ளதைச் சற்று நினைவில் கொள்வோம். (சுகி சிவம், 2013) எனவே, தமிழர்களுக்குத் தாய்மொழி மீது பற்றுப் பெருக வேண்டும் என்பது அடியேனின் கருத்தாகும்.

**நிறைவுரை**

இவ்வாய்வானது புலம்பெயர்ந்த தமிழரான இறையருட்கவிஞர் செ. சீனி நைனா முகம்மது அவர்களால் இயற்றப்பட்ட 'தேன்கூடு' எனும் கவிதைத் தொகுப்பில் சில நன்னெறிப் பண்புகளை மையமாகக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆய்வாளர், இந்த ஆய்வில் 'தேன்கூடு' கவிதையில் காணப்பட்ட நன்னெறிப் பண்புகளான விடாமுயற்சி, கடமையுணர்வு, பொறுப்புணர்வு, நேர்மை, தாய்மொழிப்பற்றைக் கொண்டு ஆய்வை மேற்கொள்ளப்பட்டுள்ளார். இம்மாதிரியான நன்னெறிப் பண்புகளைக் கட்டாயமாகப் பள்ளி மாணவர்கள் அறிந்திருக்க வேண்டும் மற்றும் வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டியவையாகும்.

**துணைநூற்பட்டியல்**

சீனி நைனா முகமது, செ. (2014). *தேன்கூடு.* பூலாவ் பினாங்கு; உங்கள்குரல் எண்டர்பிரைசு.